**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம் - 2024/2025**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் (கம்பனி) 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பன உள்ளடங்கிய 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு

அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 27 ஆம் பந்தியின் படி, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் தவிர்ந்த தகவல்கள் தவிர்ந்த ஏனைய நிதிக்கூற்றுக்கள் நிறுவனம் அட்டுறு அடிப்படையில் தயாரித்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாணடிற்குரியதும் ஆனால் 2025 மார்ச் 31 இற்குப் பின்னர் செலுத்தப்பட்டதுமான ரூபா 1.218 மில்லியன் செலவினங்கள், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செலவுகளாக அங்கீகரிக்கப்படவில்லை. இதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரிக்கப்பட்டு நடைமுறைப் பொறுப்புகள் அதே தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டும் உள்ளன. | கணக்காய்வு அவதானிப்பின்படி, 2025/26 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அட்டுறு செலவுகளுக்கான அவசியமான சரிசெய்தல்களை மேற்கொள்ளுமாறு கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திய பின்னரே கணக்காளர் அந்த நிதிக்கூற்றுக்களை சான்றளிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 36 ஆம் பந்தியின் படி, இருப்புக்களை அளவிடுவதற்காகப் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், இருப்புக்களின் மொத்தக் கொண்டுசெல்லும் பெறுமதி மற்றும் நிறுவனத்திற்குப் பொருத்தமான வகையில் வகைப்படுத்தப்பட்ட கொண்டுசெல்லும் பெறுமதிகள் என்பன நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், கம்பனி இத்தரநிலையை முறையாகப் பின்பற்றவில்லை. | கணக்காய்வு அவதானிப்பிற்கமைய, இதற்கான அவசியமான சரிசெய்தல்கள் 2025/26 நிதியாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (இ) | இலங்கை கணக்கீட்டுத் நியமம் 07 இன் 31 ஆம் பந்தியின் படி, வட்டியிலிருந்து கிடைக்கும் காசுப்பாய்ச்சல்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அவை காலத்துக்குக் காலம் சீரான முறையில் செயற்பாடு, முதலீடு அல்லது நிதிசார் செயற்பாடுகள் என வகைப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் உண்மையாகப் பெற்ற வட்டி வருமானமான ரூபா. 21.169 மில்லியனை அங்கீகரிப்பதற்குப் பதிலாக, ரூபா. 22.650 மில்லியன் வட்டி வருமானம் தேறிய இலாபத்துடன் சரிசெய்யப்பட்டு, முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட ரூபா. 1.481 மில்லியன் வித்தியாசமானது நடைமுறைச் செயற்பாடுகளின் கீழ் தொழிற்பாடு மூலதன மாற்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், வட்டி வருமானம் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும், நிறுவனம் அதனை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டள்ளது. | கணக்காய்வு அவதானிப்பிற்கமைய, இதற்கான அவசியமான சரிசெய்தல்கள் 2025/26 நிதியாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (ஈ) | கம்பனியின் ரூபா.32.02 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானம் | கணக்காய்வு அவதானிப்பிற்கமைய, பெறுமானத்தேய்வு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட போதிலும், அவை இன்னும் பயன்பாட்டில் உள்ளன. இருப்பினும், இலங்கை கணக்கீட்டுத் நியமம்16 இன் 51 ஆம் பந்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 ஆகியவற்றின் தேவைகளுக்கேற்ப, நிறுவனம் அந்தச் சொத்துக்கள் தொடர்பான வருடாந்த மீளாய்வைச் செய்யவோ அல்லது அவசியமான சரிசெய்தல்களை மேற்கொள்ளவோ இல்லை. | செய்யப்பட்ட அனைத்துச் சொத்துக்களையும் மறுமதிப்பீடு செய்ய நிறுவனம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்கான மறுமதிப்பீட்டுச் சரிசெய்தல்கள் 2025/26 நிதியாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 67 ஆம் பந்தியின் படி, ஒரு நிறுவனம் அதன் வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியையும் அதனுடன் தொடர்புடைய நடப்புச் சேவைச் செலவையும் தீர்மானிக்க எதிர்பார்க்கப்படும் அலகு வரவு முறையை பயன்படுத்த வேண்டும். இருப்பினும், கம்பனி அனைத்து ஊழியர்களினதும் ஒவ்வொரு பூர்த்தியடைந்த சேவை ஆண்டுக்கும் 1/2 மாத சம்பளத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டைக் கணக்கிட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் முடிவில் அறிக்கையிடப்பட்ட ரூபா. 6.69 மில்லியன் பணிக்கொடைப் பொறுப்பானது நியமங்களுக்கு இணங்கக் கணக்கிடப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்பிற்கமைய, கணக்கீட்டு மதிப்பீட்டு முறையைப் பின்பற்றுவதற்கும், 2025/26 நிதியாண்டின் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் 5.5.3 ஆம் பந்தியின் தேவைகளுக்கு முரணாக, ரூபா. 15.453 மில்லியன் பெறுமதியான வர்த்தகக் கடன்பட்டோர் தொகை எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான எந்தவொரு ஏற்பாடும் இன்றி ஆண்டிறுதியில் அறிக்கையிடப்பட்டுள்ளது. | 2021 திசெம்பர் 21 ஆம் திகதியிட்ட 126 ஆம் இலக்க சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குழு அறிக்கையின் அடிப்படையில், நிலுவையிலுள்ள ரூபா.15.453 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் தொகையை பகுப்பாய்வு செய்ய நிறுவனம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. | வியாபாரக் கடன்பட்டோர் தொகை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க அறிக்கையிடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய பின்னரே கணக்காளர் நிதிக்கூற்றுக்களை சான்றளிக்க வேண்டும். அத்துடன், நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு கம்பனி உடனடி நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கமைய, அறவிடமுடியாக்கடன்களை தள்ளுபடி செய்யவும், 2025/26 நிதிக்கூற்றுக்களை அறிக்கைகளில் அறவிடமுடியாக்கடன்களை ஏற்பாடுகளைச் செய்யவும் அவசியமான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும். | எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றின்படி, ரூபா.7.95 மில்லியன் தொகையானது நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் புலமைப்பரிசில் நிதியத்தின் நிலையான வைப்பாகக் காட்டப்பட்டுள்ளது. அதேவேளை, அதற்கு இணையான செலுத்த வேண்டிய நிதிய மீதி நடைமுறையல்லாப் பொறுப்புகளின் கீழ் ரூபா.7.75 மில்லியனாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இவ்விரு மீதிகளுக்கும் இடையே விளக்கமளிக்கப்படாத ரூபா.0.2 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2025 மார்ச் 31 ஆம் திகதியன்று புலமைப்பரிசில் நிதிய மீதியுடன் சரிசெய்யப்பட்ட வட்டி வருமானம் ரூபா.7.95 மில்லியனாகும், இதற்கான அவசியமான சரிசெய்தல்கள் 2025/26 நிதியாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களைச் சான்றளிக்கும் முன்னர், அவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை கணக்காளர் உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல்கூற்றில், நடைமுறைச் செயற்பாடுகளின் கீழ் வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்படுபவை எனும் தலைப்பில் ரூபா.0.57 மில்லியன் பண வெளிப்பாய்ச்சலாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இருப்பினும், வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்படுபவைகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையிலான வித்தியாசம் ரூபா. 0.79 மில்லியனாகக் காணப்பட்டது. அதன்படி, காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலானது ரூபா. 0.22 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கணக்காய்வு அவதானிப்பிற்கமைய, இதற்கான அவசியமான சரிசெய்தல்கள் 2025/26 நிதியாண்டின் நிதி அறிக்கைகளில் மேற்கொள்ளப்படும். | நிதி அறிக்கைகளைச் சான்றளிக்கும் முன்னர், பணப்பாய்வு கூற்று முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை கணக்காளர் உறுதிப்படுத்த வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் கிடைக்காமை

| | விடயம் | தொகை<br>ரூபா.மில்லியன் | ஆவணச்சான்றுகள் கிடைக்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பிடித்துவைத்தல் வருமானங்கள் | 0.22 | பொதுப்பற்றுச்சீட்டு மற்றும் பொதுப் பதிவுகளுடன் கூடிய ஆதரவு ஆவணங்கள் | ரூபா. 0.22 மில்லியன் பிடித்துவைத்தல் வருவாயில் செய்யப்பட்ட மாற்றங்களை ஆராய்வதற்குக் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025/26 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும்.. | உரிய பொதுப்பேரேடு மற்றும் துணை அறிக்கை காலதாமதமில்லாமல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருமான வரி மிள்நிதியிடல் | 1.29 | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து வரி மீளப்பெறுகையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் | அவதானிப்பிற்கமைய, இவ்விடயம் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். சபையின் தீர்மானத்திற்கு இணங்க மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும | குறித்த மீதித் தொகையை அறவிட முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களை கம்பனி கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் 14(1) பிரிவு. இது குறித்து பணிப்பாளர் சபை ஏற்கனவே கவனம் | இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாமல் எவரும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி வழங்குவதற்கான எந்தவொரு நிறுவனத்தையும் நிறுவவோ, | மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான புதிய நடைமுறையையும் வகுத்துள்ளது. இதற்காக புதிய கொள்கை பத்திரம் | சட்டத்திற்கு இணங்க, பயிற்சித் திட்டங்களைப் பதிவு செய்வதற்கும் கம்பனியால் பரீட்சைகளை நடத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தியுள்ளதுடன், | நிர்வகிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ கூடாது. இருப்பினும், பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்காக, இச்சட்டத்தின் விதிகளின்படி பதிவு செய்யப்படாத 05 நிறுவனங்களுடன் இந்நிறுவனம் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. | தயாரிக்கப்பட்டு, அது தொடர்பான புதிய நடைமுறை சம்பந்தப்பட்ட அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பந்தி. | மாதாந்த சம்பளம் பெறும் ஒரு உத்தியோகத்தருக்கா ன மேலதிக நேரக் கொடுப்பனவு, அடிப்படை மாதாந்த சம்பளத்தின் 1/30 என கணக்கிடப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் நிறுவனம் தினசரி மேலதிக நேரக் கொடுப்பனவை திரட்டிய மாதாந்த சம்பளத்தின் 1/20 என கணக்கிட்டுள்ளது. இதன் விளைவாக, 2024 மே மாதத்திற்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவு ரூபா. 0.254 மில்லியனால் அதிகரித்துள்ளதுடன், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த மேலதிக நேரச் செலவீனம் ரூபா.4.342 மில்லியனாகும். | கம்பனியின் நிர்வாகத் துணைக் குழுவின் ஆதரவுடன் நிர்வாக மற்றும் நிதி கையேடு தயாரிக்கப்பட்டுள் ளது. இக்கையேட்டில் மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு தகுதியான ஊழியர் வகைப்படுத்தல், வீதங்களைக் கணக்கிடுதல் மற்றும் வரம்புகள் குறித்த தெளிவான வழிகாட்டல்கள் உள்ளன. இக்கையேடு ஸ்தாபனக் கோவை மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. | மேலதிக நேரக் கொடுப்பனவுகள் தாபனக் கோவைக்கு இணங்கக் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| I. | நிதிப்பிரமாணம் 188 . | பணமானது வங்கியில் வைப்புச் செய்யப்படும் போது, | கணக்காய்வு அவதானிப்பிற்கமைய, 2025/26 நிதி | வைப்புக்களை வங்கிகூற்றுக்களில் உரிய காலத்தில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அதற்குரிய வங்கி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதையும், வங்கி அறிக்கைகளுடன் ஒப்பிட்டு வரவுகளை உறுதிப்படுத்துவதையும் பொறுப்பான உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும். இருப்பினும், ரூபா. 72,500 பெறுமதியான 04 தேறாத காசோலைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் அந்தத் தொகை வரவேண்டிய வருமானமாக கணக்கிடப்பட்டுள்ளது | அறிக்கைகளில் இதனைச் சரிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒப்பிட்டுப் பார்ப்பதையும், வங்கி அங்கீகாரத்துடன் கூடிய வைப்புக்களை இனங்காண்பதையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் மேற்கொள்வதை கணக்காளர் உறுதிப்படுத்த வேண்டும். |
| II. | நிதிப்பிரமாணம் மற்றும் 257 | 138 | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களை சான்றளிக்க அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர், செலவினத்தின் உண்மைத்தன்மையைய உறுதிப்படுத்தி அதற்கேற்பச் சான்றளிக்கப் பொறுப்பானவர் ஆவார். இருப்பினும், 2024 மே மாதத்தில் எந்தவித பற்றுச்சீட்டு சான்றளிப்பும் இன்றி மொத்தம் ரூபா.0.451 மில்லியன் பெறுமதியான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. | தற்போது, அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் சான்றளிக்கப்படாமல் எந்தவொரு பற்றுச்சீட்டும் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படுவதில்லை. | பற்றுச்சீட்டும் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் அக்கொடுப்பனவை அங்கீகரித்துள்ளாரா என்பதை கணக்காளர் உறுதிப்படுத்த வேண்டும். |
| III. | நிதி ஒழுங்குவிதி 396 | | ஒரு காசோலை வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும் தேறாமல் இருந்து, பணம் பெறுநருக்கு அனுப்பப்பட்ட கடிதங்களுக்குப் | கணக்காய்வு அவதானிப்பிற்கமைய, நிதிப்பிரமாணங்களின்படி காசோலைகள் சமர்ப்பிக்கப்படாதது குறித்து | ஆறு மாதங்களுக்கு மேல் தேறாமல் இருக்கும் காசோலைகளை கணக்காளர் ரத்து செய்ய வேண்டும் என்பதுடன், நிதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதில் கிடைக்காதவிடத்து, நிறுவனம் அக்காசோலையை ரத்து செய்துவிட்டு அந்தத் தொகையைத் தொடர்புடைய பேரேட்டில் ஒரு பொறுப்பாக குறிப்பிட வேண்டும். இருப்பினும், வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா.0.205 மில்லியன் பெறுமதியான 03 காசோலைகள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒழுங்குவிதி 396 இன் படி அதனை ஒரு பொறுப்பாக அங்கீகரிக்க வேண்டும். |
| (இ) | 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதியிட்ட 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி | i.வழங்கப்பட்ட உப கட்டுநிதி முற்பணங்கள் தொடர்புடைய பணி முடிந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்ற போதிலும், 24 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. 1.64 மில்லியன் தொகையானது பணி முடிந்த திகதியிலிருந்து 10 முதல் 111 நாட்கள் வரை தாமதமாகவே தீர்க்கப்பட்டுள்ளது. | சில முற்பணத் தீர்ப்புகள் 10 நாட்களுக்கு மேல் எடுத்துக்கொண்டது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இருப்பினும், புதிய நிதி ஒழுங்குவிதி கையேட்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் முற்பணத் தீர்ப்புகளில் ஏற்படும் தேவையற்ற தாமதங்களைத் தவிர்க்க கம்பனி அவசியமான உள்நாட்டுக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை எடுக்கும். பயன்படுத்தப்படாத முற்பணங்கள் குறித்த உத்தியோகத்தர்களின் விளக்கங்கள் இணைப்பு III, IV மற்றும் V இல் உள்ளன. | நிதிச் சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்கவே முற்பணங்கள் வழங்கப்படுவதும் தீர்க்கப்படுவதும் அமைய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ii. 04 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட ரூபா. 0.128 மில்லியன் முற்பணத் தொகையானது எவ்வித பயன்பாடும் இன்றித் தீர்க்கப்பட்டுள்ளது. | இத்தகைய நடைமுறைகளைத் தவிர்க்குமாறு ஏற்கனவே உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| | | iii. பிரதம நிதி உத்தியோகத்தர் ஒரு குறிப்பிட்ட பணிக்காக நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக்கு ஒரு தடவையில் அதிகபட்சமாக ரூபா. 100,000 வரை மட்டுமே முற்பணம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும், 16 சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையை மீறி ரூபா.2.3 மில்லியன் முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களுக்கான முற்பணத் தொகையை அதிகபட்சமாக ரூபா.100,000 ஆக மட்டுப்படுத்தக் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது | - மேற்படி - |
| (ஈ) | அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகள் நிறுவனத்தின் கூட்டிணைந்த நல்லாளுகை வழிகாட்டியின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. (எஸ்ஓஈகள்) | | | |
| I. | வழிகாட்டலின் பிரிவு 4.2 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் 03 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும். | தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமனங்கள் காரணமாக 2024/25 இல் ஒரு கூட்டம் மட்டுமே | வழிகாட்டலின் 4.2 பிரிவின்படி கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருப்பினும், மீளாய்வாண்டில் நிறுவனம் ஒரேயொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தை மட்டுமே நடத்தியுள்ளது. | நடத்தப்பட்டது. இருப்பினும், 2025/26 ஆம் ஆண்டிற்கான முதல் இரண்டு காலாண்டுகளுக்கான கூட்டங்கள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளதுடன், 3-வது கூட்டம் 2025 அக்டோபர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| II. | வழிகாட்டலின் பிரிவு 4.4 | அனைத்து அரச நிறுவனங்களும் ஓர் உள்ளக கணக்காய்வாளரைக் கொண்டிருக்க வேண்டும் என்ற போதிலும், வழிகாட்டலின்படி நிறுவனம் அத்தகைய உத்தியோகத்தரை நியமிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்திற்கு உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கமைய, அப்பதவிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான கோரிக்கைக் கடிதம் சம்பந்தப்பட்ட அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வழிகாட்டலின் 4.4 பிரிவின்படி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| III. | செயல்பாட்டுக் கையேட்டின் 5.3 ஆம் பந்தி | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கடன்தீர்வுத் திறன் பரிசோதனையை பூர்த்தி செய்த பின்னர், வரிக்குப் பிந்தைய இலாபத்தில் குறைந்தது 30 சதவீதத்தை திரட்டப்பட்ட நிதியத்திற்கு/பங்குதாரர்களுக்கு வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நிறுவனம் அவ்வாறு செயல்படவில்லை. | கடன்தீர்வுத் திறன் பரிசோதனையை மேற்கொள்வதற்கும், நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தை உரிய காலத்தில் நடத்துவதற்கும் கம்பனி அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | செயல்பாட்டுக் கையேட்டின்படி வரிக்குப் பிந்தைய இலாபத்தை நிறுவனம் பங்கீடு செய்ய வேண்டும்.. |
| IV. | செயல்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற போதிலும், நிதி அறிக்கைகள் 105 நாட்கள் தாமதத்துடனேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | 2025/26 நிதியாண்டின் நிதி அறிக்கைகளை நிதியாண்டு முடிந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கக் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | செயல்பாட்டுக் கையேட்டின்படி நிதி அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். |

## 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்குச் சொந்தமான ஒரு வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா.161,076 மீதி உள்ளது. இது 2015 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித கொடுக்கல் வாங்கல்களுமின்றி செயலிழந்த நிலையில் காணப்படுகிறது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது என்பது கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆதாரங்கள் மற்றும் தேவையான அனுமதிகளைப் பெற்ற பின்னர், இவ்விடயத்தைத் தீர்ப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். | கணக்கினை செயற்படுத்துவதற்கோ அல்லது முடிவுறுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா.30.31 மில்லியன் தொகையான மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44.33 மில்லியன் தொகையானதால் நிதிசார்

விளைவுகளில் ரூபா.14.01 தொகையான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா.20.26 மில்லியனால் குறைவடைந்தமையே இந்தப் பின்னடைவிற்குக்கு காரணமாகவிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் கம்பனியை மறுசீரமைக்குமாறு உரிய அமைச்சின் செயலாளரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், அது தொடர்பாக ஹொட்டல் ஒன்றில் கருத்தரங்கு நடத்துவதற்காக மாத்திரம் ரூபா.0.33 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அந்த கருத்தரங்கைத் தவிர, மீளாய்வாண்டின் இறுதி வரை நிறுவனம் வேறு எந்தவொரு மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்தவில்லை. | கம்பனியின் நிர்வாகக் துணைக் குழு ஏற்கனவே கம்பனிக்கான மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. அந்த மூலோபாயத் திட்டத்திற்கு இணங்க நிறுவன மறுசீரமைப்பு செயல்முறை நடைமுறைப்படுத்தப்படும். | மறுசீரமைப்பிற்கான அவசியத்தை கம்பனி இனங்காண வேண்டும் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த விரிவான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். மேலும், அவற்றைச் செயல்படுத்துவதற்கான காலக்கெடு மற்றும் அவை செயல்படுத்தப்படும் விதம் ஆகியவை அதற்கேற்ப பரிசீலிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024/2025 கணக்கீட்டு ஆண்டில் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் மனித வளங்களை மேம்படுத்துவதற்காக, திறந்த பணிமனைகள், விசேட பணிமனைகள், பரீட்சை பாடநெறிகள் மற்றும் வெளிவாரி பயிற்சித் திட்டங்கள் உட்பட 262 நிகழ்ச்சிகளை நடத்த கம்பனி திட்டமிட்டிருந்தது. இருப்பினும், அக்காலப்பகுதியில் 198 நிகழ்ச்சிகள் மாத்திரமே நடத்தப்பட்டுள்ளன. அதன்படி, திட்டமிடப்பட்ட இலக்கை குறித்த கால அட்டவணைப்படி அடைய முடியவில்லை என அவதானிக்கப்பட்டது. | தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, பெரும்பாலான நிறுவனங்கள் தங்களது மனிதவள மேம்பாட்டு வரவுசெலவுத் திட்டங்களைக் குறைத்துள்ளன. கம்பனி எதிர்பார்த்த இலக்கை அடையத் தவறியதற்கு இதுவே முக்கிய காரணமாகும். எவ்வாறாயினும், சமூக ஊடகத் தளங்கள் உள்ளிட்ட சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எமது எதிர்கால நிகழ்ச்சிகளை ஊக்குவிக்குமாறு உயர்மட்ட நிர்வாகம் ஏற்கனவே நிகழ்ச்சிப் பிரிவுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. | மனித வளங்களைப் பயிற்றுவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அவசியமான துறைகளை அடையாளம் காணுதல் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்தும் விதம் குறித்து கணக்கீட்டு உத்தியொகத்தர் எழுத்துப்பூர்வமான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும். |

### 3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கான தேசிய தினத்தை அறிவிக்கும் திட்டத்திற்கு இணங்க, 2013 ஆம் ஆண்டில் ஒரு கல்வி உதவித்தொகை நிதி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டில் புத்தக அடையாளக் குறிகளை விற்பனை செய்வதன் மூலம் மாணவர்கள் ரூபா. 3.27 மில்லியனைத் திரட்டினர். இருப்பினும், இந்தத் தொகை குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் நிலையான வைப்பாகவே இருந்துள்ளது. மீளாய்வாண்டில் இந்நிதியின் மதிப்பு ரூபா.7.75 மில்லியனாக அதிகரித்துள்ளது. பொது நிதிச் சுற்றறிக்கை 04/2024 இன் படி, இந்நிதியை உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்கோ அல்லது குறிப்பிட்ட நோக்கமற்ற நிதியைத் திரட்டிய நிதியத்திற்கு மாற்றுவதற்கோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இவ்விடயம் ஏற்கனவே கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சின் மட்டத்திலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றது. மேலும், இவ்விடயத்தை பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து இது தொடர்பாக ஒரு முடிவை எடுக்க நிறுவனம் எதிர்பார்க்கிறது. | நிதியை அதன் நோக்கத்தை அடைவதற்காகப் பயன்படுத்துவதற்கு அல்லது பொது நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க அதனைத் திரட்டிய நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2025 யூலை 31 ஆம் திகதி நிலவரப்படி, நிறுவனத்தின் அனைத்து நிறைவேற்று அதிகாரத் தர பதவிகள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட 32 பணியாளர் தொகுதியில், பொது முகாமையாளர் மற்றும் ஆலோசகர்கள் போன்ற முக்கிய பதவிகள் உட்பட 10 பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. இது கம்பனியின் குறிக்கோள்களை அடைவதில் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். | ஏற்கனவே வெற்றிடமாக இருந்த கணக்காய்வாளர் மற்றும் நிர்வாக அதிகாரி பதவிகளுக்கு பொருத்தமான வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொது முகாமையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான பத்திரிகை விளம்பரம் 2025 அக்டோபர் 5 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அத்துடன், நிர்வாக உதவியாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு அனுமதி கோரும் விண்ணப்பம், அமைச்சின் செயலாளர் ஊடாக ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப பணியாளர்களை மறுசீரமைப்பதற்கும், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகுதிக்கு ஏற்ப ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.ய |